Hindu Tamil 09.01.2026

இந்து தமிழ் திசை நாளிதழ், அவினாசிலிங்கம் மகளிர் உயர்கல்வி நிறுவனம் சார்பில்

# பள்ளி மாணவர்கள் பங்கேற்ற ஓவியம் மற்றும் அறிவியல் கண்காட்சி

**கோவை**

'இந்து தமிழ் திசை' நாளிதழ், கோவை அவினாசிலிங்கம் மகளிர் உயர்கல்வி மற்றும் மனையியல் அறிவியல் நிறுவனம், பொறியியல் பள்ளியின் அறிவியல் மற்றும் மனிதவியல் துறை சார்பில், பள்ளி மாணவ, மாணவியரின் திறனை மேம்படுத்தும் வகையில், 'டெக்னோ சயின்ஸ் ஃபேர் 2கே26' எனும் தலைப்பில் ஓவியம் மற்றும் அறிவியல் கண்காட்சி போட்டிகள், நேற்று நடத்தப்பட்டன. பொறியியல் பள்ளியின் வளாகத்தில் நடைபெற்ற போட்டியில், 20 பள்ளிகளை சேர்ந்த சுமார் 300 மாணவ, மாணவியர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

பரிசளிப்பு விழாவில் பொறியியல் புல முதன்மையர் எஸ்.சிவக்குமாரி வரவேற்றார். அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் அறிவியல் உயர்கல்வி நிறுவனத்தின் துணைவேந்தர் வி.பாரதி ஹரிசங்கர் தலைமை வகித்து பேசும்போது, "வகுப்பறை மட்டுமின்றி வாழ்வு முழுவதும் நாள்தோறும் நாம் கற்க வேண்டும். படைப்பாற்றல் தொழில்நுட்பத்தை நாள்தோறும் வளர்த்துக் கொள்ளும் போது, நாம் அந்தந்த துறையில் மிளிரலாம்.

மேலும் இது போன்ற போட்டிகள், தலைமைத்திறன் மற்றும் குழுவோடு ஒருங்கிணைந்து பணியாற்றும் திறன்களையும் வளர்க்க உதவும்" என்றார். தொடர்ந்து போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



இந்து தமிழ் திசை நாளிதழ் மற்றும் கோவை அவினாசிலிங்கம் மகளிர் உயர் கல்வி நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற ஓவியம் மற்றும் அறிவியல் கண்காட்சி போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருடன் துணைவேந்தர் வி.பாரதி ஹரிசங்கர் உள்ளிட்டோர். படம்: ஜெ.மனோகரன்

ஓவியப்போட்டியில் ஸ்ரீராம கிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த 8-ம் வகுப்பு மாணவர் கே.கார்த்திக் முதல் பரிசும், அதே பள்ளியை சேர்ந்த பிளஸ் 1 படிக்கும் மாணவி இ. விஷ்ணுபிரியா 2-ம் பரிசும், பிஷப் பிரான்சிஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 8-ம் மாணவி ஆர்.ஷர்மி ஏஞ்சலின் 3-ம் பரிசும் பெற்றனர்.

அறிவியல் கண்காட்சியில் அக்சயா அகாடமி (டிஏசி) பள்ளி பிளஸ் 1 வகுப்பை சேர்ந்த எஸ்.கே.திரிஷாந்த், எஸ்.வருண் ஆகியோர் முதல் பரிசும், பிஷப் பிரான்சிஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 8-ம் வகுப்பு மாணவர் எஸ். கவின் இரண்டாம் பரிசும், டாக்டர் பிஜிவி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த ஆர்.சாய்ஹர்சன், எஸ்.ஹரிவேல் ஆகியோர் 3-ம் பரிசும் பெற்றனர்.

துணைவேந்தர் வி.பாரதி ஹரிசங்கர் பதக்கம் மற்றும் பரிசுகளை வழங்கினார். போட்டியில் பங்கேற்ற அனைத்து பள்ளி மாணவ, மாணவியருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அறிவியல் மற்றும் மனிதவியல் துறை தலைவர் எஸ்.மலர்விழி நன்றி தெரிவித்தார்.